**செய்தி வெளியீடு எண்.503** **நாள்.20.8.2009**

**மாண்புமிகு துணை முதலமைச்சர் டாக்டர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமைச் செயலகத்தில் இன்று (20/08/2009) பதிவுத்துறையில் கருணை அடிப்படையில் 54 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.**

மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பதிவுத்துறையில் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட 54 நபர்களுக்குப் பணி நியமன ஆணைகளை வழங்கினார்கள். இந்நிகழ்வின்போது மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு என். சுரேஷ்ராஜன், வணிகவரி மற்றும் பதிவுத்துறைச் செயலாளர் திரு ராஜீவ் ரஞ்சன், இ.ஆ.ப. மற்றும் பதிவுத்துறைத் தலைவர் திரு இரா. சிவகுமார், இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.

அரசாணை எண்.659, வணிகவரி மற்றும் பதிவுத்துறை ( எம்2) , நாள் 28-12-2006ன்படி பதிவுத்துறையில் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்படுவதற்கு அரசால் ஆணையிடப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் ஏற்கனவே 06.03.2007 ஆம் நாளில் 48 நபர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்து ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது.

அரசாணை எண்.194, வணிகவரி மற்றும் பதிவுத்துறை ( எம்2) , நாள் 27.04.2009ன்படி இன்று (20.08.2009) 52 நபர்களுக்கு இளநிலை உதவியாளர் பணியும், 2 நபர்களுக்கு தட்டச்சர் பணியும் ஆக மொத்தம் 54 நபர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்து ஆணைகள் வழங்கப்பட்டது.

இத்துறையில் கருணை அடிப்படையில் இதுவரை 102 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்து, அரசால் ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது.

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.